23.09.2025 OS.No.179/2021 PW2 Name :.**செல்வராஜ்**

குறுக்கு விசாரணை

1. நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் சொல்ல எனக்கு சம்மன் வந்தது. சம்மனில் ரோடு பிரச்சனை என்று வந்தது. வழக்கு என்னுடைய அண்ணன் தாக்கல் செய்த வழக்கு. என்ன பரிகாரத்திற்காக வழக்கு போடபட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் சர்வே எண் பற்றி தெரியாது. யார் யார்மீது வழக்கு போடபட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் என்மீது முனிசிப் கோர்ட்டில் வழக்கு போட்டுள்ளார்கள். அது நிலுவையில் தான் உள்ளது.
2. வழக்கு சொத்து என்னுடைய தாத்தா பெரியசாமி பெயரில் இருந்தது. பெரியசாமி யாரிடம் சொத்து வாங்கினார் என்று தெரியாது. பெரியசாமிக்கு முனிசாமி, கண்ணுகவுண்டர், சுப்பிரமணி ஆகியோர்கள் வாரிசுகள். பெரியசாமி உயிருடன் இருக்கும்போது சொத்தில் பாகம் எதுவும் செய்யவில்லை. அவர்களுக்குள் பாகபிரிவினை ஏற்பட்டது பற்றி எனக்கு தெரியாது. 1974ல் அவ்வாறு பாகபிரிவினை ஏற்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. கண்ணுகவுண்டர் சம்பாதித்த சொத்து என் அப்பாவிற்கு வந்தது.
3. ஊர் பெரியவர்கள் மூலமாக பேசி சொத்து கொடுக்கபட்டது. மொத்த சொத்தின் விஸ்தீரணம் தெரியாது. 30 செண்டில் பொதுகளம் கிணறு அருகில் உள்ளது. பாகபிரிவினை பத்திரத்தில் அந்த 30 செண்டை பொதுவாக வைத்துக்கொள்ளவேண்டும் என எழுதபட்டுள்ளது.

இன்றைய தேதிவரை அது பொதுவாக தான் உள்ளது. பெரியசாமி எழுதிகொடுத்த சொத்தை முனிசாமிகவுண்டரும் சுப்பிரமணி கவுண்டரும் பிரிக்காமல் அப்படியே தான் வைத்துள்ளார்கள். என்னுடைய அப்பா கண்ணுகவுண்டர் மட்டும் சொத்தை பிரித்து நாகராஜ், முருகேசன், செல்வராஜ் ஆகியோர்களுக்கு எழுதிகொடுத்தார்.

4. கண்ணுகவுண்டருக்கு 2 மனைவிகள். அவர்கள் ரத்தினம், முத்தம்மாள் ஆவார்கள். ரத்தினத்திற்கு முருகேசன், காமாட்சி ஆகியோர்கள் வாரிசுகள். முத்தம்மாளுக்கு நாகராஜ் லட்சுமி, மற்றொரு லட்சுமி, செல்வராஜ், தனலட்சுமி ஆகியோர்கள் வாரிசுகள். கண்ணுகவுண்டர் எல்லோருக்கும் தான் செட்டில்மெண்ட் எழுதிகொடுத்துள்ளார். எல்லோருக்கும் எழுதிகொடுக்காமல் எனக்கும் செல்வராஜிக்கு மட்டும் எழுதிகொடுத்திருந்தால் அது செல்லாத ஆவணம் ஆகும். நான் 5ம் வகுப்பு படித்துள்ளேன்.

5. வா.சா.ஆ.2 ஆவணம் நாகராஜ் பெயரில் மட்டும் தான் உள்ளது. மற்ற வாரிசுகள் பெயர் அதில் இல்லை. நாகராஜ் என் அப்பாவை கூட்டிச்சென்று மோசடியாக வா.சா.ஆ.2 ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் மோசடியானது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் வாரிசுகள் கையெழுத்து போட்டுள்ளார்கள். அதில் யாரும் கையெழுத்து போடவில்லை என ஆவணத்தை பார்த்து சாட்சி கூறுகிறார். வா.சா.ஆ.2 ஆவணத்தை ராமகிருஷ்ணமூர்த்தி என்பவர் தயார் செய்தார். அவர்களிடம் வாரிசுகளை கூட்டிக்கொண்டு காட்டினேன்.

6. செட்டில்மெண்ட் பாக சொத்து வருவதற்காக வாரிசுகள் கையெழுத்து போட்டார்கள். நானும் என் அண்ணனும் சேர்ந்து வா.சா.ஆ.2 ஆவணத்தை மோசடியாக உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. கண்ணு கவுண்டர் கையெழுத்து போடுவார் என்றும் அவரிடம் நாங்கள் கைநாட்டு பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் எழுதிய தேதியில் என் தகப்பனார் சுயநினைவு இல்லாமல் இருந்தார் என்றால் உண்மை கிடையாது. பொதுவழி பொதுகளத்தில் நானும் என் சகோதரரும் தடை செய்தோம் என்றால் எங்களுடைய நிலத்தில் நாங்கள் போட்டோம்.
7. அவர்கள் நிலத்தில் அவர்கள் போட்டார்கள். பொதுகளத்தில் போடவில்லை. ஸ்ரீதர் என்பவரை மண்வெட்டியால் அடித்து கைத்தியால் அடித்து காது கிழிந்தது பற்றி எனக்கு தெரியாது. பின்னர் அதுபற்றி தெரிந்துகொண்டேன். போலிசார் வழக்கு பதிவு செய்து குற்றவாளிகளை கைது செய்தார். கண்ணுகவுண்டர் எந்த அயிட்ட சொத்தை ஆவணத்தில் எழுதி வைத்தார் என்பது எனக்கு தெரியாது. பொதுகளத்தில் நானும் என் அண்ணனும் ஆக்கிரமிப்பு செய்து பொதுகளத்தில் போர்வெல்லில் தண்ணீர் எடுக்காமல் தடை செய்தோம் என்றால் சரியல்ல.
8. நீதிமன்ற ஆணையர் வரும்போது நான் இருந்தேன். 30 செண்ட் பொதுகளத்தை அளந்ததுபற்றி தெரியும். அப்போது நானும் என் அண்ணனும் ஆக்கிரமிப்பு செய்ததாக குறித்து கொண்டார் என்றால் அவ்வாறு இல்லை. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை பற்றி தெரிந்து கொண்டேன். பொதுவழியில் தடை செய்துள்ளோம்

என்றால் அது பொதுவழி கிடையாது. அந்த வழிக்கு தனியாக பத்திரம் உள்ளது. என்னுடைய தகப்பனாரிடமிருந்து அது வாங்கபட்டது. மூன்றாம் மனிதர்களிடம் அது வாங்கவில்லை.

9. 2007ல் வாங்கினேன். அதற்கு பணம் எதுவும் கொடுக்கவில்லை. 700அடியை வாங்கினேன். அதற்கு சர்வே எண் தெரியாது. என்னுடைய அண்ணன் பெயரில் உள்ளது. பட்டா எண் 144. பிரதிவாதிகள் மீது தவறான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 23/09/2025 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2025.09.23 16:17:49 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.